டிராக்டர் மோதி ஆசிரியை பலி

பண்ருட்டி, மார்ச் 14–

டிராக்டர் மோதி, ஆசிரியை பலியானது குறித்து போலீசார் விசாரிக்கின்றனர்.

புதுச்சேரி மாநிலம் மடுகரையை சேர்ந்தவர் அய்யப்பன். இவரது மனைவி சவுந்தரி, 35; இவர் திருத்துறையூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பகுதி நேர ஆசிரியராக பணிபுரிந்து வந்தார்.

நேற்று மதியம் 1:45 மணியளவில் கண்டரக்கோட்டை – திருத்துறையூர் சாலையில் குச்சிப்பாளையம் அருகில், தனது ஸ்கூட்டியில், சென்று கொண்டிருந்தார். அவருக்கு பின்னால், பகுதி நேர ஆசிரியர் சிவசங்கரி அமர்ந்திருந்தார்.

அப்போது எதிரில் திருத்துறையூரில் இருந்து கரும்பு ஏற்றிக்கொண்டு வந்த டிராக்டர் அவர் மீது மோதியது. இதில் சம்பவ இடத்தில் சவுந்தர்யா இறந்தார். இதில் சிவசங்கரி, சிறுகாயத்துடன் உயிர் தப்பினார்.

இது குறித்து புதுப்பேட்டை போலீசார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

சிறுமி பலாத்காரம் ஆசாமி கைது

சேத்தியாத்தோப்பு, மார்ச் 14–

அப்துல் ஹமீது

சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த வாலிபரை போலீசார் போக்சோவில் கைது செய்தனர்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார் கோவில், எள்ளேரி கிராமத்தை சேர்ந்த பகீர்மஸ்தா மகன் அப்துல்ஹமீது, 41; இவர், 9 வயது சிறுமியை, தோட்டத்திற்கு அழைத்துச் சென்று பாலியல் பலாத்காரம் செய்தார்.

இது குறித்த புகாரின் பேரில் சேத்தியாத்தோப்பு அனைத்து மகளிர் போலீஸ் இன்ஸ்பெக்டர் கவிதா வழக்குப் பதிந்து, சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை செய்தார்.

தொடர்ந்து, போலீசார் அப்துல்ஹமீதை போக்சோ சட்டத்தில் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

மினி வேன் மீது 'எம்.சாண்ட்' லோடு லாரி மோதல்

தொழிலாளி பலி ; 16 பேர் படுகாயம்

விழுப்புரம், மார்ச் 14–

விழுப்புரம் அடுத்த வாணியம்பாளையத்தில் 'எம்.சாண்ட்' ஏற்றி வந்த டிப்பர் லாரி, மினி வேன் பின்னால் மோதியதில் வேன் சாலையோர வீட்டின் ஒரு பகுதியில் மோதி நின்றது.

விழுப்புரம் அருகே 'எம்.சாண்ட்' லோடு ஏற்றி வந்த டிப்பர் லாரி, மினி வேன் மீது மோதிய விபத்தில் ஒருவர் இறந்தார். 16 பேர் படுகாயமடைந்தனர்.

விழுப்புரம் அடுத்த ப.வில்லியனுாரைச் சேர்ந்த கரும்பு வெட்டும் தொழிலாளிகள் 20 பேர், நேற்று காலை 5:30 மணிக்கு, விக்கிரவாண்டி அடுத்த வி.மாத்துார் பகுதியில் கரும்பு வெட்டுவதற்காக மினி வேனில் சென்றனர்.

கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலையில், கோலியனுார் அடுத்த வாணியம்பாளையம் சர்வீஸ் சாலை பஸ் நிறுத்தம் அருகே சென்றபோது, பண்ருட்டியிலிருந்து விழுப்புரம் நோக்கி வந்த 'எம்.சாண்ட்' லோடு ஏற்றி வந்த டிப்பர் லாரி மினி வேன் பின்னால் மோதியது.

மோதிய வேகத்தில் மினி லாரி சாலையோரம் இருந்த வீட்டின் ஒரு பகுதியில் மோதி சேதத்தை ஏற்படுத்தியது. அதிர்ஷ்டவசமாக வீட்டில் யாரும் இல்லாததால் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது. இந்த விபத்தில் மினி வேனில் வந்த தட்சணாமூர்த்தி, 47; பாட்டாபி, 56; அங்கம்மாள், 45; சேகர், 62; உட்பட 17 பேர் படுகாயமடைந்தனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற வளவனுார் போலீசார், காயமடைந்தவர்களை மீட்டு விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லுாரி மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி சேகர் இறந்தார்.

விபத்து குறித்து, போலீசார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

எம்.எல்.ஏ., ஆறுதல்

காயமடைந்து சிகிச்சை பெறுபவர்களை மருத்துவமனையில் லட்சுமணன் எம்.எல்.ஏ., கலெக்டர் ஷேக் அப்துல் ரஹ்மான் ஆகியோர் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர்.

தொடர்ந்து கல்லுாரி டீன் லுாசி நிர்மல் மெடோனா, டாக்டர்சவுந்தர்ராஜன், ஆர்.எம்.ஓ., ரவிக்குமார் ஆகியோரிடம் உரிய சிகிச்சை அளிக்குமாறு கேட்டுக்கொண்டனர். கண்டமங்கலம் சேர்மன் வாசன், ஒன்றிய செயலாளர்கள் பிரபாகரன், தெய்வசிகாமணி, வழக்கறிஞர் கண்ணப்பன் உடனிருந்தனர்.

கனரக வாகனங்களால் விபத்து

கோலியனுார் அருகே விபத்து நடந்த பகுதியில், விக்கிரவாண்டி – கும்பகோணம் நான்கு வழிச்சாலைத் திட்டப் பணிகள் நீண்டகாலமாக நடந்து வருகிறது. இந்த பணிகளுக்கு மண், ஜல்லிகளுடன் அதிகளவில் கனரக வாகனங்கள் அணிவகுத்து செல்கின்றன.

மேலும், கோலியனுார் முதல் கண்டரக்கோட்டை வரை எப்போதும் கனரக வாகனங்கள் செல்வதால், சாலை பணிகள் நடந்து வரும் இடங்களில், கிராம சந்திப்புகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன் விபத்துகளும் நடக்கிறது. இதனால், அந்த சாலையில் வாகன ஓட்டிகள் அச்சத்துடன் செல்கின்றனர்.

அரசு பஸ் மீது கார் மோதல் விபத்து கடலுாரில் பரபரப்பு

கடலுார் ஆல்பேட்டை தென்பெண்ணையாறு மேம்பாலத்தில் அரசு பஸ் மீது கார் மோதி விபத்துக்குள்ளானது.

கடலுார், மார்ச் 14–

கடலுார் பெண்ணையாற்று பாலத்தில் காரின் முன்பக்க டயர் வெடித்து அரசு பஸ் மீது மோதி விபத்துக்குள்ளானது.

கடலுார் பெண்ணையாற்று பாலத்தில் நேற்று மதியம் ஒரு மணியளவில் போர்டு ஈகோ ஸ்போர் கார் ஒன்று, புதுச்சேரியிலிருந்து கடலுாரை நோக்கி வந்தது.

அப்போது காரின் வலது பக்க முன் டயர் வெடித்ததில் கட்டுப்பாட்டை இழந்த கார் எதிர்புறமாக திரும்பி, அவ்வழியே வந்து கொண்டிருந்த அரசு பஸ் மீது மோதியது.

இதில் காரின் வலது புறம் முழுவதுமாகவும், அரசு பஸ்சின் முன்பக்கமும் சேதமடைந்தது. அதிர்ஷ்டவசமாக கார் மற்றும் பஸ்சில் பயணம் செய்த யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

தகவலறிந்த ரெட்டிச்சாவடி போலீசார் விசாரணை மேற்கொண்டனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

தாழ்வாக பறந்த ஜெட் விமானம் விருத்தாசலத்தில் மக்கள் பீதி

விருத்தாசலம், மார்ச் 14–

விருத்தாசலத்தில் சிறிய ரக ஜெட் விமானம் தாழ்வாக பறந்து சென்றதால் பரபரப்பு நிலவியது.

கடலுார் மாவட்டம், விருத்தாசலம் பகுதியில் நேற்று காலை 9:15 மணியளவில், சிறிய ரக ஜெட் விமானம், தாழ்வாக பறந்து சென்றது. பயங்கர சப்தத்துடன் குடியிருப்புகளுக்கு மேலே பொது மக்களின் பார்வைக்கு எளிதாக தெரியும் வகையில் விமானம் பறந்து சென்றது.

சப்தம் கேட்ட சிறுவர்கள் உட்பட பலரும் குடியிருப்புகளை விட்டு வெளியே வந்து, சாம்பல் நிறத்தில் பறந்த ஜெட் விமானத்தை ஆவலுடன் பார்த்து ரசித்தனர். 150 அடி தொலைவில் 10 பேர் அமர்ந்து பயணிக்கும் வகையில் இருந்தது. இந்த விமானம் நெய்வேலி மார்க்கமாகவும், பின்னர் தஞ்சாவூர் மார்க்கமாகவும் பறந்து, மறைந்தது.

தஞ்சாவூரில் பயன்பாட்டில் உள்ள விமான நிலையத்தில், ஜெட் உள்ளிட்ட சிறிய ரக விமானங்கள் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

இருப்பினும், ஜெட் ரக விமானம் கண்ணுக்கு எட்டிய தொலைவில் தாழ்வாக பறந்து சென்றது, இப்பகுதி மக்களிடம் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,
விருத்தாசலம்.
M.C.O.P.62 / 2025
C.ஆறுமுகம், ரெப்.பை.அடுத்த சிநேகிதர் மனைவி அருள்ஜோதி, கிழக்கு தெரு, ரெட்டிப்பாளையம் கிராமம் & அஞ்சல், ஆண்டிமடம் வட்டம், அரியலூர் மாவட்டம்.
– மனுதாரர் / மனுதாரர்
எதிர்
M. பாலாஜி, த/பெ.முத்து, 37, வடக்கு தெரு, ஸ்ரீமுஷ்ணம் & அஞ்சல், ஸ்ரீமுஷ்ணம் வட்டம், கடலூர் மாவட்டம்.
– எதிர்மனுதாரர் / 1ம் எதிர்மனுதாரர்
மேற்படி எண் வழக்கறிஞர் கொடுக்கும்
அறிவிப்பு

மேற்படி எண் நீதிமன்றத்தில் மனுதாரர் தங்கள் மீதும் மற்றும் சிலர் பேர்கள் மீதும் விபத்து நஷ்டஈடு கோரி மனுத் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. மேற்படி மனுவில் தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் வரும் 30.03.2026 தேதியில் காலை 10.30 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்துக்கொள்ள வேண்டியது. இல்லையெனில், தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதனை இதன் மூலம் அறியவும்.

R. ஸ்ரீநிவாசன், B.Com.,M.L.,
வழக்குரைஞர், 5, சுந்தரர் தெரு,
சைவசந்து, விருத்தாசலம்–606 001.
செல் : 94433 31427

சார்பு நீதிமன்றம் விருத்தாசலம்
IA 1/2026 in OS 53/2024
வேலுமணி, த/பெ. மாரிமுத்து
எண்.30, தேவார தெரு, வடக்கு பெரியார் நகர், விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம் –வாதி
எதிர்
சசிகலா தேவி, க/பெ. கிருஷ்ணமூர்த்தி
வீட்டு எண். 33/3, ராசாம்பாள் நகர், கடலூர் & வட்டம், மாவட்டம்.
–பிரதிவாதி
வாதியின் வழக்கறிஞர் கொடுக்கும்
அறிவிப்பு

மேற்படி வழக்கில் பிரதிவாதி சசிகலாதேவிக்கு பலமுறை அழைப்பானை அனுப்பியும் அழைப்பானை சார்வாகாததால் மேற்படி நீதிமன்றத்தின் கட்டளைக்கு இனங்க இந்த அறிவிப்பு கொடுக்கப்படுகிறது. மேற்படி வழக்கு 26.03.2026 அன்று வாய்தா போடப்பட்டள்ளது மேற்படி பிரதிவாதி மேற்படி வழக்கில் ஆட்சேபனை இருந்தால் மேற்படி நீதிமன்றத்தில் மேற்படி தேதியில் காலை 10.30 மணிக்கு முன்னிலையாகி தனது ஆட்சேபனையை தெரிவிக்கலாம் தவறும் பட்சத்தில் மேற்படி வழக்கில் ஒருதலைபட்சமாக தீர்ப்பு வழங்கப்படும் என்பதை இதன் மூலம் தெறிவிக்கப்படுகிறது.

வாதியின் வழக்கறிஞர்
P.RAMACHANDRAN, M.A., B.L.,
Virddhachalam,
Mobile: 9659892926

சட்டசபை தேர்தல் எதிரொலி வங்கிகளில் பணம் தட்டுப்பாடு

விழுப்புரம், மார்ச் 14–

சட்டசபை தேர்தல் நெருங்கும் நேரத்தில், வங்கிகளில் திடீர் பணம் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் சட்டசபை தேர்தலுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகிறது. விரைவில், தேர்தல் தேதி அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிட உள்ளது. அதனையொட்டி தமிழத்தில் பிரதான கட்சிகள் தேர்தல் பணிகளை துவங்கி விட்டன.

இம்முறை தி.மு.க., – அ.தி.மு.க., – நா.த.க., – த.வெ.க., என நான்கு முனைப்போட்டி இருக்கும் என்பதால், கடந்த தேர்தல்களை விட இந்த தேர்தல் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால், தேர்தல் தேதி அறிவிப்புக்குப்பின், கட்சியினர் பணத்தை தாராளமாக செலவிட்டு மக்களை திக்குமுக்காட செய்யும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது.

இந்நிலையில், விழுப்புரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் கடந்த ஒரு வார காலமாக வங்கிகளில் திடீர் பண தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இது குறித்து, வங்கி ஊழியர்கள் தரப்பில் கூறியதாவது:

வங்கிகளுக்கு கடந்த ஒரு வார காலமாகவே வாடிக்கையாளர் தரப்பிலிருந்து பணம் டிபாசிட் போன்ற பரிவர்த்தனை குறைந்துள்ளது. வாடிக்கையாளர்களிடமிருந்து பணம் வரத்து குறைந்துள்ளதோடு, ஆர்.பி.ஐ., தரப்பிலும் தொகை வழங்குவது குறைக்கப்பட்டுள்ளது. இதுனால், தற்போது வங்கிகளுக்கு அவசர தேவைக்காக வரும் வாடிக்கையாளர்களுக்கு பெரிய அளவிலான தொகையை வழங்க முடியாமல் திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு வாடிக்கையாளருக்கு அதிகபட்சமாக 1 லட்சம் ரூபாய் மட்டுமே தினசரி பணம் வழங்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. குறைந்தபட்ச பணம் பரிவர்த்தனை வைத்துள்ள சிறிய வாடிக்கையாளர்களுக்கு 5,000 முதல் 10 ஆயிரம் ரூபாய் மட்டுமே வழங்குவதும், பெரிய வாடிக்கையாளர்களுக்கு 1, 2 லட்சம் ரூபாய் அளவில்தான் தொகையாக வழங்க முடியும் என்ற சூழல் உள்ளது.

அவசர தேவைக்காக வரும் வாடிக்கையாளர்கள் சில நாட்களாக ஏமாற்றத்தோடு திரும்புகின்றனர். வங்கிகளுக்கு வரும் குறைந்தபட்ச தொகையும், வாடிக்கையாளர் தரப்பிலிருந்து வராதால், இந்நிலை ஏற்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களும் பணமாக கொடுக்க முடியாமல், அக்கவுன்ட் டிரான்ஸ்பர் முறை தான் செய்ய வேண்டியுள்ளது.

மாவட்டங்கள் தோறும் வங்கிகளுக்கு ஆர்.பி.ஐ., மூலம் தொகை வழங்கும் செஸ்ட் வங்கிகளுக்கும் தொகை வரத்து குறைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் காரணமாக, கட்சியினர் பலர் செலவிடுவதற்காக பணத்தை பதுக்கியிருக்கலாம் என்பதால் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கலாம். தேர்தல் பணம் பட்டுவாடாவைத் தடுக்க மத்திய அரசு தரப்பில் பல்க் பணப்புழக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவும் வாய்ப்புள்ளது.

இதனால், ஏ.டி.எம்., மையத்தில் பணத்தை நிரப்பவும் நெருக்கடி உள்ளது. அவசர தேவைக்காக நகைக் கடன் வைக்க வருபவர்களுக்கு கூட தற்போது பணமாக கொடுக்க முடியாத சூழல் உள்ளது.

மருத்துவ தேவை, வணிக தேவைக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு பணம் கொடுக்க முடியாமல் வங்கி நிர்வாகம் திண்டாடி வருகிறது,.

இவ்வாறு வங்கி ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

ரேஷன் கடை பணியாளர்களுக்கு ரூ.3 ஊக்கத்தொகை அறிவிப்பு

சென்னை, மார்ச் 14–

'பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கியதற்கு, ரேஷன் கடை பணியாளர்களுக்கு, ஒரு கார்டுக்கு மூன்று ரூபாய் ஊக்கத் தொகை வழங்க, முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்' என, கூட்டுறவு துறை அமைச்சர் பெரிய கருப்பன் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை:

இந்தாண்டு பொங்கலுக்கு, 2.22 கோடி அரிசி கார்டுதாரர்களுக்கு, ஒரு கிலோ பச்சரிசி, சர்க்கரை, கரும்பு, 3,000 ரூபாய் ரொக்கம் வழங்க, முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டார்.

கடந்த காலங்களில், பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கியதற்காக, ரேஷன் கடை பணியாளர்களுக்கு, கூடுதல் பணிச்சுமையை ஈடுசெய்யும் வகையில், கார்டுக்கு 50 காசு வழங்கப்பட்டு வந்தது.

ரேஷன் கடை பணியாளர்களின் கோரிக்கையை பரிசீலித்து, இந்த ஆண்டு பொங்கல் பரிசு தொகுப்பை, சிறந்த முறையில் வழங்கியதற்காக, பணியாளர்களுக்கு ஒரு கார்டுக்கு, மூன்று ரூபாய் ஊக்கத்தொகை வழங்க, முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இதற்காக கூடுதல் செலவினம், 6.47 கோடி ரூபாய் வழங்க நிர்வாக அனுமதி அளித்துள்ளார்.

இதன் வாயிலாக, ரேஷன் பணியாளர்களின் நீண்டநாள்கோரிக்கையை, முதல்வர் நிறைவேற்றியுள்ளார். அவருக்கு, கூட்டுறவு துறை சார்பிலும், பணியாளர்கள் சார்பிலும் மனமார்ந்த நன்றி.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ஜே.சி.பி., ஓனரை தாக்கிய வழக்கு போலீஸ் ஏட்டு சஸ்பெண்ட்

கடலுார், மார்ச் 14–

பெண்ணாடம் அருகே ஜே.சி.பி.,ஓனரை தாக்கிய போலீஸ் ஏட்டை சஸ்பெண்ட் செய்து எஸ்.பி., உத்தரவிட்டார்.

கடலுார் மாவட்டம், திட்டக்குடி போலீஸ் நிலையத்தில் பணிபுரிந்த ஏட்டு கார்த்திகேயன், சிவில் வழக்கு ஒன்றில் தலையிட்ட குற்றச்சாட்டில் கடலுார் ஆயுதப்படைக்கு பணியிடமாற்றம் செய்து எஸ்.பி., உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் கடந்த 11ம் தேதி, பெண்ணாடம் அம்பேத்கர் நகர் அருகே ரியல் எஸ்டேட் தொழில் செய்து வரும் ஜே.சி.பி., ஓனர் அருணகிரிநாதன் என்பவரை வழிமறித்து, ஆபாசமாக திட்டி தாக்கியது குறித்து புகாரின் பேரில் கார்த்திகேயன் மீது பெண்ணாடம் போலீஸ் நிலையத்தில், 5 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இதையடுத்து ஜே.சி.பி.,ஓனரை தாக்கிய போலீஸ் ஏட்டு கார்த்திகேயனை நேற்று சஸ்பெண்ட் செய்து எஸ்.பி.,ஜெயக்குமார் உத்தரவிட்டார்.

ஐகோர்ட் தீர்ப்பு சிமெண்ட் சாலை அகற்றம்

மந்தாரக்குப்பம், மார்ச் 14–

மந்தாரக்குப்பம் அடுத்த கீழ்பாதி பகுதியை சேர்ந்தவர் செங்குட்டுவன். இவருடைய பட்டா நிலத்தில் கீழ்பாதி ஊராட்சி, சிமெண்ட் சாலை மற்றும் கழிவுநீர் வடிகால் அமைக்கப்பட்டது.

இதை எதிர்த்து செங்குட்டுவன், சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இதை விசாரித்த சென்னை ஐகோர்ட் சிமெண்ட் சாலை மற்றும் வடிகால அகற்ற உத்தரவிட்டது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்ட பின் நேற்று காலை நெய்வேலி டி.எஸ்.பி., ராதாகிருஷ்ணன், கம்மாபுரம் பி.டி.ஓ., ரவிச்சந்திரன் முன்னிலையில், கீழ்பாதியில் சிமெண்ட் சாலை அகற்றப்பட்டது.

அரசு போக்குவரத்துக் கழக அலுவலகத்தில் ஆலோசனை

விழுப்புரம், மார்ச் 14–

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின், விழுப்புரம் கோட்ட தலைமை அலுவலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

கூட்டத்திற்கு, மேலாண் இயக்குநர் குணசேகரன் தலைமை தாங்கினார். அரசு போக்குவரத்துக் கழகத்தின் விழுப்புரம், கடலுார், வேலுார், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும திருவள்ளூர் மண்டல அலுவலர்கள், கிளை மேலாளர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தில், பாதுகாப்பான பஸ் இயக்கம், வருவாய் பெருக்கம், டீசல் சிக்கனம், உதிரி பாகங்கள் கொள்முதல், ஆண்டு தணிக்கைகள் உள்ளிட்டவை குறித்து அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

அப்போது மேலாண் இயக்குநர் பேசுகையில், 'தமிழக அரசு சார்பில், போக்குவரத்துக் கழக வளர்ச்சிக்காக பல்வேறு நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுகிறது. குறிப்பாக புதிய பஸ்கள், பணியாளர் பாதுகாப்பு நலன், அனைத்து கிளை அலுவலக கட்டடங்கள் புதுப்பிப்பு உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

விபத்தில்லா பஸ் இயக்கத்தில் பணியாளர்கள் கவனம் செலுத்தி, அரசு போக்குவரத்துக் கழக வளர்ச்சிக்கு பணியாற்ற வேண்டும்' என்றார்.

கூட்டத்தில், பொதுமேலாளர்கள் ரவீந்திரன், ஜெகதீஷ், பாண்டியன், ஸ்ரீதர், பெனட்ராஜன், கிருஷ்ணமூர்த்தி, கோபாலகிருஷ்ணன், முதுநிலை துணைமேலாளர் துரைசாமி, மற்றும் அலுவலர்கள் பங்கேற்றனர்.

பைக் மீது கார் மோதி விபத்து தனியார் நிறுவன ஊழியர் பலி

வானுார், மார்ச் 14–

கிளியனுார் அருகே பைக் மீது கார் மோதிய விபத்தில் தனியார் நிறுவன ஊழியர் இறந்தார்.

திண்டிவனம் அடுத்த எண்டியூர் பஜனை கோவில் தெருவைச் சேர்ந்தவர் ராஜசேகர், 38; தீவனுாரில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். இவர் நேற்று முன்தினம் வேலை முடிந்து தனது நண்பர் ஒருவரை எறையானுார் கிராமத்தில் விட்டு விட்டு, வீட்டிற்கு திரும்பினார்.

எறையானுார் புதுச்சேரி – திண்டிவனம் புறவழிச்சாலையோரத்தில் மண் பாதையில் இறங்கி எதிர் திசையில் சென்றபோது, புதுச்சேரி மார்க்கமாக வந்த இனோவா கார் ராஜசேகர் மீது மோதியது. இதில், படுகாயமடைந்த அவரை திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் ராஜசேகர் இறந்தார்.

மணி மண்டபத்தின் உள் அரங்கு வாடகைக்கு விட அரசு அனுமதி

விழுப்புரம், மார்ச் 14–

21 சமூகநீதிப் போராளிகள் மணிமண்டபம்
21 SOCIAL JUSTICE WARRIORS MANIMANDAPAM

விழுப்புரம், கண்டமானடி ஊராட்சியில் உள்ள சமூக நீதி போராளிகள் நினைவு மண்டபம்.

விழுப்புரத்தில் அமைந்துள்ள சமூக நீதி போராளிகள் நினைவு மண்டபத்தில், உள் அரங்கு வாடகைக்கு விட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

தமிழக அரசு, 4 மாவட்டங்களில் அமைத்துள்ள நினைவு மண்டபங்களில், பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அரங்குகள் வாடகைக்கு விடப்படுகிறது. தமிழக அரசு செய்தித்துறை மூலம், விழுப்புரம், கண்டமானடி ஊராட்சியில் 21 சமூக நீதிப் போராளிகளுக்கான மணி மண்டபம். சிவகங்கை மாவட்டம், கல்லல் ஒன்றியம் சிராவயலில் உத்தமர் காந்தியடிகள், மறைந்த தலைவர் ஜீவா நினைவு அரங்கம். நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் ஊராட்சியில் முன்னாள் சென்னை மாகாண முதல்வர் டாக்டர் சுப்பராயன் அரங்கம்.

அரியலுார் மாவட்டம், கீழப்பழுவூரில் மொழிப் போராட்ட தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி அரங்கம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது. இவற்றை தமிழக முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்துள்ளார்.

இந்த நினைவு மண்டபங்களில் உள்ள அரங்குகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக வாடகைக்குவிட அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த அரங்குகளில் பொதுமக்கள் பிறந்த நாள், காதணி விழா, மஞ்சள் நீர் உள்ளிட்ட சுப நிகழ்ச்சிகள் மற்றும் சிறு கூட்டங்கள் நடத்த குறைந்த கட்டணமாக 3000 ரூபாய் செலுத்தி, பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதற்கான அறிவிப்பை, முதல்வர் ஸ்டாலின் உத்தரவின்படி, அரசு செயலர் ராஜாராமன் வெளியிட்டுள்ளார்.

விழுப்புரம் கண்டமானடி ஊராட்சியில் அமைந்துள்ள 21 சமூக நீதிப் போராளிகளுக்கான மணி மண்டபத்தின் அருகில், தனியாக உணவு அருந்தும் கூடத்திற்கு கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

மணி மண்டப அரங்கில் நிகழ்ச்சிகள் நடைபெறும் போது, பங்கேற்பாளர்கள் உணவு அருந்த வசதியாக இந்த கட்டடம் தனியாக அமைக்கப்பட்டுள்ளது.

அவலுார்பேட்டையில் வீடு புகுந்து நகை திருட்டு

அவலுார்பேட்டை, மார்ச் 14–

அவலுார்பேட்டை அடுத்த கப்ளாம்பாடி கிராமத்தைச் சேர்ந்தவர் முருகன் மனைவி பத்மாவதி, 39; இவர் நேற்று முன்தினம் காலை 11:00 மணிக்கு வீட்டை பூட்டி விட்டு அதே பகுதியில் உள்ள ரேஷன் கடைக்கு சென்றவர் திரும்பி வந்து பார்த்தபோது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு உள்ளே பீரோவில் இருந்த 68 கிராம் தங்க நகை, வெள்ளி பொருட்கள் 750 கிராம் திருடு போனது தெரியவந்தது. புகாரின் பேரில் அவலுார்பேட்டை போலீசார் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

விழுப்புரம் கிளை
40/41, தியாகராஜர் தெரு, திரு.வி.க. சாலை,
விழுப்புரம் - 605 602.
போன் : 04146-225424, Mail ID: villup@bankofbaroda.bank.in

(baanknet போர்ட்டலில் நடத்தப்படும் ஏலத்திற்கான செய்தித்தாள்களில் வெளியிடப்படும் சுருக்கமான விற்பனை அறிவிப்பு)

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV-Aயின்படி (விதி 6(2) மற்றும் 8(6)யை பார்க்கவும்)
2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் விதிகளின் கீழ் 6(2) மற்றும் 8(6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்தல் அறிவிப்பு.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **பாங்க் ஆஃப் பரோடா வங்கி**யின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **''எங்கு உள்ளதோ அப்படியே'' ''எப்படி உள்ளதோ அப்படியே'' மற்றும் '' என்ன இருக்கிறதோ அதே நிலையில்''** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் விபரம், நிலுவைத் தொகை விபரம், சொத்து விபரம் குறைந்தபட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர்கள் மற்றும் முகவரி : திருமதி.மலர்கொடி, க/பெ. திரு.கலியபெருமாள், நெ.70, கோவிந்த ராஜ் பெருமாள் தெரு, விழுப்புரம்–605 602. மற்றும் **திருமதி.செல்வி (எ) கலைச்செல்வி, க/பெ. திரு. குப்புசாமி,** நெ. 19/33, கோவிந்தராஜ் பெருமாள் தெரு, விழுப்புரம்–605 602.

Loan A/c.No.**33100400000038,** நிலுவை தொகை ரூ.**19,66,682.37/-** மேலும் **08.03.2026**
அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.
08.03.2026 அன்று மொத்த நிலுவைத் தொகை ரூ.19,66,682.37/–

அசையாச் சொத்தின் சுருக்கமான விவரங்கள் மற்றும் ஏதேனும் வில்லங்கங்கள் இருப்பின்

விழுப்புரம் பதிவு மாவட்டம், விழுப்புரம் இணை – 1, சார்பதிவு அலுவலகம், விழுப்புரம் நகரம் மற்றும் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு-A, பிளாக்–14, கதவு எண்.19 மற்றும் டவுன் சர்வே எண். 1 (புஞ்சை சர்வே நெ.490–1.29)ல் அமைந்துள்ள வீட்டுமனை மற்றும் கட்டிடத்தின் பரப்பளவு. கிழக்கு முதல் மேற்கு வரை 31½ அடி, தெற்கிலிருந்து வடக்கு வரை 96அடி, இதன்மொத்த அளவு 3024 சதுரடி அல்லது 281.10 சதுரமீட்டர்கள் மற்றும் திருமதி. மலர்கொடி க/பெ. திரு. கலியபெருமாள் மற்றும் திருமதி.கலைச்செல்வி க/பெ. திரு. குப்புசாமி பெயரில் கட்டப்பட்ட கட்டிடம் உட்பட. **நான்கு எல்லைகள்** : ஜி.ஆர்.பி.தெருவிற்கு தெற்கு, காலி நிலத்திற்கு வடக்கு, திருமதி.பாஞ்சாலி மற்றும் திரு.கண்ணன் அவர்களின் நிலத்திற்கு கிழக்கு, பொதுவான பாதைக்கு மேற்கு.

உள்ளது. **சுவாதீன நிலை : ஆக்கப்பூர்வ நிலை**

நிர்ணயிக்கப்பட்ட விலை	ரூ. 35,38,000/-	டேவணித் தொகை	ரூ. 3,53,800/-	ஏல உயர்வு தொகை	ரூ. 25,000/-

மின் ஏல தேதி மற்றும் நேரம் **22.04.2026** அன்று மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரை வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

சொத்தினை பார்வையிடும் தேதி : 25.03.2026 (நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை)
டேவணித் தொகை செலுத்துவதற்கான கடைசி நாள்: 22.04.2026

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு **https://www.bankofbaroda.bank.in/e-auction** என்ற இணையதள இணைப்பை பார்க்கவும்/வருகைதரவும். மேலும் ஏலதாரர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அங்கிகரிக்கப்பட்ட அதிகாரி செல் : 9481183507 & 9515024578 தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 12.03.2026
இடம் : விழுப்புரம்

அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர்/
பேங்க் ஆஃப் பரோடா